DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W.9 |
| Name | : | **திரு. அமரேஸ்வர் ரெட்டி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29.09.25

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.06.2024 ம் தேதி அதே மருத்துவமனையில் மாலை 4.30 மணியளவில் மருத்துவராக பணியில் இருந்தபோது 32 வயது பெண் அழகுநித்யா த.பெ.சௌந்தரபாண்டியன் என்பவர் சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அன்றைய தினம் மதியம் 3.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தெரிந்த ஒரு நபர் அருவாளால் தாக்கியதில் காயம்பட்டதாக கூறினார்.

2. அவரை பரிசோதித்து பார்த்தில் வலது உள்ளங்கையில் 2x1x2cm அளவில் ஒரு கிழிந்த காயம் (Laceration) காணப்பட்டது. அதே வலது

உள்ளங்கையில் மற்றொரு காயம் (Laceration) 1x1x1 cm அளவில் காணப்பட்டது. அதே வலது கை கட்டைவிரலில் 0.5x0.5x0.5 cm அளவில் மற்றொரு காயம் (Laceration) காணப்பட்டது. மற்றும் இடது முன்கையில் ஒரு 2cm அளவில் தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.

3. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக எங்கள் மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை நிபுணரின் கீழ் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் சிகிச்சையிலிருந்து 26.06.2024 ம் தேதியன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.4** ஆகும்.

4. அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான 56 வயது பெண் மல்லிகா க.பெ.சௌந்தரபாண்டியன் என்பவர் சூரவள்ளி என்பவரால் எங்கள் மருத்துவமனைக்கு 23.06.2024 ம் தேதி மாலை 4.40 மணியளவில் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அன்றைய தினம் மதியம் 3.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தெரிந்த ஒரு நபர் அருவாளால் தாக்கியதில் காயம்பட்டதாக கூறினார்.

5. அவருக்கு பரிசோதித்து பார்த்ததில் வலது பக்க பின் மண்டையில் 5x2x2cm அளவில் ஒரு கிழிந்த காயம் (Laceration) காணப்பட்டது. அதே பகுதியில் 2x2x2cm அளவில் மற்றொரு கிழிந்த காயம் (Laceration) காணப்பட்டது. வலது கையில் 2x1x1cm அளவில் கிழிந்த காயம் (Laceration) காணப்பட்டது. இடது கையில் 1x1x1cm அளவில் கிழிந்த காயம் (Laceration) காணப்பட்டது. இடது தோள்பட்டைக்கு பின்புறம் 3x2x1 cm அளவில் ஒரு கிழிந்த காயம் (Laceration) காணப்பட்டது. மேலும் அவரை மூளை நரம்பு அறுவை சிகிச்சை நிபுணரின் கீழ் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டது. மல்லிகாவுக்கு சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து 26.06.2024 ம் தேதியன்று விடுவிக்கப்பட்டார். **மல்லிகாவுக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும்**

**சாதாரண காயங்கள்** என கருத்து தெரிவித்து நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.5** ஆகும்.

6. அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான 33 வயது பெண் கடம்பவள்ளி க.பெ.கண்ணன் என்பவர் சூரவள்ளி என்பவரால் எங்கள் மருத்துவமனைக்கு 23.06.2024 ம் தேதி மாலை 4.40 மணியளவில் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அன்றைய தினம் மதியம் 3.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தெரிந்த ஒரு நபர் அருவாளால் தாக்கியதில் காயம்பட்டதாக கூறினார். கடம்பவள்ளியை பரிசோதித்து பார்த்ததில் அவரது வலது முன்கையில் தையலிடப்பட்ட ஒரு காயம் காணப்பட்டது.

7. வலது கைவிரல்களில் நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் ஆகிய பகுதிகளில் லேசான வெட்டு காயங்கள் காணப்பட்டது. வலது தோள்பட்டையில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் புறநோயாளியாக சிகிச்சை எடுத்ததால் அவருக்கு உண்டான காயங்கள் குறித்து என்னால்கருத்து தெரிவிக்க இயலவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்களின் அடிப்படையில் சாதாரண காயங்களாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. **கடம்பவள்ளி என்பவருக்கு நான் வழங்கிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.6** ஆகும். காயம்பட்ட மூன்று நபர்களுக்கு உண்டான காயங்கள் குறித்து விபத்து பதிவேடு எங்கள் மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதை பார்த்து நான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் (அ.த.பொ.சா1) மூலமாக காயம்பட்டவர்களுக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. வழக்கு சம்மந்தமாக திருப்புவனம் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் தற்போது ஞாபகமில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. போலிசார் என்னை விசாரித்து எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. சிகிச்சை சம்மந்தமான காயச்சான்றிதழ்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் எனது கையால் நான்

கொடுக்கவில்லை. காயச்சான்றிதழ்கள் என்னால் கையொப்பம் செய்து கொடுக்கப்பட்டது. காயம்பட்ட நபர்கள் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை செய்வதற்கு முன்பே வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

2. வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார்களா என்று எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் Case Sheet-ல் மேற்படி விபரத்தை நான் குறிப்பிட்டுள்ளேன். அழகு நித்யாவிற்கு எத்தனை காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான்கு காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். அ.த.சா.ஆ.4 முதல் 6 வரையான ஆவணங்கள் என்ன என்றால் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்படுகின்ற காயச்சான்றிதழ்கள் ஆகும். அ.த.சா.ஆ.4 ஆவணத்தில் அழகுநித்யாவிற்கு Assault with right hand injury என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 4 காயங்கள் குறித்து காயச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், எதனால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் எங்கள் மருத்துவமனையில் உள்ள Format of Wound Certificate -ல் காயங்கள் வரிசையாக குறிப்பிடப்படவில்லை, Final Diagnosis at time of discharge from hospital குறிப்பிடப்பட்டுள்ளது.

3. பொதுவாக ஒரு காயச்சான்றிதழில் நோயாளிக்கு ஏற்பட்டுள்ள காயங்களை குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.4 முதல் 6 வரையான காயச்சான்றிதழ் எப்போது வழங்கப்பட்டது என்றால் அதில் தேதி

குறிப்பிடப்படாததால் என்னால் கூற இயலவில்லை. மல்லிகாவின் அ.த.சா.ஆ.5 காயச்சான்றிதழில் நான்கு காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது List of Final Diagnosis at time of discharge from hospital. அ.த.சா.ஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது காயங்கள் இல்லை என்றால் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது injury related diagnosis ஆகும். அ.த.சா.ஆ 4 முதல் 6 வரையான ஆவணங்களில் காயங்கள் பற்றி முழுமையாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4. அ.த.சா.ஆ.4 முதல் 6 வரையான காயச்சான்றிதழ்களில் யார் எழுதியது என்றால் என்னுடைய ஜீனியர் எழுதினார் அதை சரிபார்த்து நான் கையொப்பம் செய்தேன். அழகுநித்யாவிற்கு தையல் போடப்பட்ட காயங்கள் எவை என்றால் இடது முன்கையில் 2cm அளவில் தையலிடப்பட்ட காயம் காணப்பட்டுள்ளது. கடம்பவள்ளி வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதால் அவருக்கு மருத்துவ சான்று வழங்க இயலாது என அவரது காயச்சான்றிதழில் குறிப்பிட்டு வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

5. கடம்பவள்ளிக்கு நான் சிகிச்சை ஏதும் அளித்தேனா என்றால் அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் வெளிநோயாளிகளுக்கும் உள்நோயாளிகளுக்கும் சிகிச்சை அளித்தேனா என்றால் நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்ததால் சிகிச்சை அளித்தேன். காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர்கள் சொன்ன நேரத்திலிருந்து சுமார் 12 மணி நேரத்திற்கு முன்பே ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் அது பற்றி என்னால்

கருத்து தெரிவிக்க இயலாது. மேற்சொன்ன காயங்கள் ஆனது தன்னைத்தானே ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது என்றால் வாய்ப்பில்லை.

6. அ.த.சா.ஆ.1 அருவாளை தவிர வேறு ஆயுதத்தினாலும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. மேற்சொன்ன காயங்கள் வாகனங்களில் சென்று கீழே விழுந்து கல் குத்தி அதனால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். நான் காயம்பட்டவர்களுக்கு சொன்ன நாள், நேரத்தில் சிகிச்சை அளிக்கவில்லை என்றும் எனக்கு கீழ் பணியுரியும் பயிற்சி மருத்துவர்கள் தயாரித்து வைத்திருந்த காயச்சான்றிதழ்களில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.4 முதல் 6 வரையான ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.29 18:43:11 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**